එම්. යූ. එම්. අලි සබ්රි, පා.ම.
எம்.யூ.எம். அலி ஸப்ரி, பா.உ
M.U.M. Ali Sabry, PC, MP
විදේශ කටයුතු අමාත්‍ය
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்
Minister of Foreign Affairs

## சுதந்திர தின வாழ்த்துச் செய்தி

75 ஆண்டுகளுக்கு முன்னர், ஏறக்குறைய ஐந்து நூற்றாண்டு கால ஐரோப்பிய காலனித்துவ ஆட்சியின் பின்னர், 1948 பெப்ரவரி 04ஆந் திகதி இலங்கை ஒரு பெருமைமிக்க இறையாண்மை தேசமாக சுதந்திரம் பெற்றது. நாடுகளின் இறையாண்மை சமத்துவம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் நிறுவப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடாக நாம் சர்வதேச சமூகத்திற்குள் நுழைந்தோம்.

சுதந்திரத்தின் ஆரம்ப ஆண்டுகளில், சர்வதேச அரங்கில் புதிதாக சுதந்திரம் பெற்ற நாடுகளின் அபிலாஷைகள் மற்றும் முன்னுரிமைகளை வென்றெடுப்பதில் இலங்கையின் அரச தலைவர்கள் முக்கிய பங்கு வகித்தனர். கொழும்புத் திட்டம், கொழும்பு வல்லரசுகள், பாண்டுங் மாநாடு, பொதுநலவாய நாடுகள் ஆகியவற்றின் ஊடாக, தேசபிதா டி.எஸ். சேனநாயக்க உட்பட எமது தலைவர்கள் சர்வதேசக் கூட்டுறவுகளை உருவாக்குவதிலும், பிராந்திய ஒற்றுமையை வலுப்படுத்துவதிலும் ஈடுபட்டனர். உலகின் முதல் பெண் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்களின் தலைமையில், இலங்கை அணிசேரா இயக்கத்தின் முன்னணியில் உயர்வடைந்ததுடன், சர்வதேச விவகாரங்களில் சுயநிர்ணயம், சமத்துவம் மற்றும் நீதிக்கு ஆதரவாக ஆசியா மற்றும் ஆபிரிக்காவில் புதிதாக சுதந்திரமாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுடன் ஒற்றுமையாக இணைந்து நின்றது.

உலகளாவிய சுகாதாரம் மற்றும் இலவசக் கல்வியை வழங்குவதன் மூலம், கடந்த 75 ஆண்டுகளில் எமது மக்களின் கல்வியறிவு, வாழ்க்கைத் தரம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதில் மகத்தான முன்னேற்றங்களை அடைந்துள்ளோம். நாங்கள் தேசத்தைப் பாதுகாத்து, தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலான பயங்கரவாத பிரிவினைவாதத்தை முறியடித்துள்ளோம். எனினும், நாம் எதனை மேலும் சிறப்பாக சாதித்திருக்கலாம் என்பதை யதார்த்தமாகப் பரிசீலிக்க வேண்டும். தேசத்தைக் கட்டியெழுப்புதல், நல்லிணக்கம், ஒற்றையான இலங்கை அடையாளத்தின் ஊடாக தேசிய ஐக்கியத்தை உருவாக்குதல் மற்றும் நெகிழ்ச்சியான, நிலையான, ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல் ஆகிய துறைகளில் நாம் சாதிக்க வேண்டியது மேலும் அதிகமாகும். இந்த இலக்குகளை அடைந்து கொள்வதற்காக, நாம் நேர்மையாகப் பிரதிபலித்து, மீளாய்வு செய்து, முன்னோக்கிய வகையில் திட்டமிடல் வேண்டும்.

කාර්යාලය/அலுவலகம்/Office: +94-11-2430221, +94-11-2445498 ෆැක්ස්/பெக்ஸ்/Fax No.: +94-11-2430222
වෙබ් අඩවිය/வலைத்தளம்/Website: www.mfa.gov.lk - ඊමේල්/மின்னஞ்சல்/Email: fmo@mfa.gov.lk
විදේශ කටයුතු අමාත්‍යාංශය, ජනරජ ගොඩනැගිල්ල, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, குடியரசுக் கட்டிடம், கொழும்பு 01, இலங்கை.
Ministry of Foreign Affairs, Republic Building, Colombo 01, Sri Lanka.

வலுப்படுத்தப்பட்ட ஜனநாயக அரசாங்கம், நல்லிணக்கம், பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் அபிவிருத்தியின் ஊடாக முன்னெப்போதும் இல்லாத வகையில் சமூக மற்றும் பொருளாதார சவால்களை எதிர்கொள்வதற்கான ஐக்கிய முயற்சியில் இன்று இலங்கையர்கள் ஒன்றிணைந்துள்ளனர். எமது சமூகத்தின் அனைத்து துறைகளினதும் அபிவிருத்தி மற்றும் முன்னேற்றத்திற்கான வாய்ப்புக்களை அதிகப்படுத்துவதில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு தனது இராஜதந்திர முயற்சிகளின் வாயிலாக கவனம் செலுத்தும். இந்த தேசிய முன்னுரிமைகளுக்கான சர்வதேச ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்காக, அமைச்சு மற்றும் அதன் வெளிநாட்டுத் தூதரகங்களின் வலையமைப்பு ஆகியன உறுதிபூண்டுள்ளன. வெளிநாட்டில் வாழும் இலங்கையர்களின் குறிப்பிடத்தக்க பங்களிப்பை நாங்கள் அங்கீகரிப்பதுடன், அவர்களின் தொடர்ச்சியான ஈடுபாட்டை வரவேற்கின்றோம்.

எமது சுதந்திரத்தின் 75வது ஆண்டு நிறைவில், ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் இன நல்லிணக்கத்தை வலுப்படுத்துதல், சிறந்த பொருளாதார முகாமைத்துவம், மீட்பு மற்றும் எதிர்கால அபிவிருத்திக்கான நிலையான அடித்தளத்தை உருவாக்குவதற்காக ஜனரஞ்சகக் கொள்கை இல்லாத சூழல் ஆகியவற்றுக்கானதொரு வாய்ப்பு எங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எமது தேசத்தின் வெற்றி, செழிப்பு மற்றும் பிரகாசமான எதிர்காலத்திற்கான நம்பிக்கையுடன் எமது வேறுபாடுகளைக் களைந்து, மீண்டும் கட்டியெழுப்பவும் புதுப்பிக்கவும் எமக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்றுள்ளது. அதைக் கைப்பற்றுவதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும். இந்த முக்கியமான முயற்சியில் எம்முடன் இணைந்து கொள்ளுமாறு உலகெங்கிலும் வாழும் இலங்கையர்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம்.

எம்.யூ.எம். அலி சப்ரி, ஜ.ச., பா.உ.
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்

2023 பிப்ரவரி 04